பக்கங்கள்: 07

காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2053 தை 05 செவ்வாய்க்கிழமை 18.01.2022 கதிர் 301

## போதைப்பொருள்களுடன் மூவர் வசமாகச் சிக்கினர்

விசேட சோதனை நடவடிக்கைகளின் போது போதைப்பொருள்களுடன் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு இன்று தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக, அநுராதபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சேனாநாயக்க மாவத்தை பிரதேசத்தில், அநுராதபுரம்

☞2

# கோட்டா பேச்சு வெறும் குப்பை!

## பஸிலிடம் சம்பந்தன் பாய்ச்சல்; போய்க் கூறும்படியும் காட்டம்



**கொழும்பு, ஜனவரி 18**

**"ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இந்த உரை வெறும் குப்பை. அதில் ஒன்றுமே இல்லை. இதை அப்படியே போய் ஜனாதிபதியிடம் கூறுங்கள்." - இப்படி ஜனாதிபதியின் சகோதரரும் நிதி அமைச்சருமான பஸில் ராஜபக்ஷவிடம் முகத்துக்கு நேரில் காட்டத்துடன் சீறி விழுந்து கூறினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்.**

☞2

## மிகவும் மட்டரக பேச்சு!

### சுமந்திரனும் வைகின்றார்



"ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இந்தக் கொள்கை விளக்கப் பிரகடன உரை மிகவும் மட்டரகமான பேச்சு. அதைக் கேட்டுக் கொண்டிருக்கும் போது அவர் இலங்கையைப் பற்றித் தான பேசுகின்றாரா அல்லது வேறு ஏதேனும்

☞2

## தேநீர் விருந்தை நிராகரித்தது கூட்டமைப்பு

நாடாளுமன்றத்தை ஆரம்பித்துவைத்து ஜனாதிபதி ஆற்றிய கொள்கை விளக்க பிரகடன நிகழ்வின் பின்னர் இடம்பெறும் சம்பிரதாயபூர்வ தேனீர் வைபவத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அடியோடு புறக்கணித்தனர்.

☞2

## புதிய ஜனாதிபதி செயலராக காமினி நாளை பதவியேற்பு!

ஜனாதிபதி செயலாளராக காமினி செனரத் நாளை பதவியேற்கின்றார்.

ஜனாதிபதியின் முன்னாள் செயலாளர் கலாநிதி பி.பி.ஜயசுந்தர கடந்த வியாழக்கிழமை தனது பதவியை இராஜினாமா செய்ததையடுத்து அவரால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு காமினி செனரத் நியமிக்கப்பட்டார்.

இதேவேளை, நீர்ப்பாசன அமைச்சின் செயலாளர் அனுர திஸாநாயக்க எதிர்வரும் 20ஆம் திகதி பிரதமரின் செயலாளராகவும் கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளார்.



## உரையைப் புறக்கணித்தனர் கத்தோலிக்க மத குருமார்கள்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜன.18

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சம்பிரதாய உரை நாடாளுமன்றில் இடம்பெற்றபோது கத்தோலிக்க மதகுருமார் நிகழ்வைப் புறக்கணித்தனர்.

9 ஆவது நாடாளுமன்றின் இரண்டாவது அமர்வு இன்றைய தினம் ஜனாதிபதியால் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன்போது சர்வ மதகுருமாரும்

☞2

## இருவேறு இடங்களில் மாயமான ஆண், பெண் சடலங்களாக மீட்பு!

கேகாலை, களுத்துறை ஆகிய மாவட்டங்களின் இருவேறு பிரதேசங்களில் காணாமல்போன இருவரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப்பிரிவு இன்று தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக கேகாலை, தெஹியோவிட்ட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிறிய மழை பகுதியில் கற்குழியிலிருந்து ஆண் ஒருவரின்

☞2

## வடக்கு, கிழக்கில் படையினர் வசமுள்ள காணிகள் அனைத்தும் விடுவிக்கப்படும்

### கொள்கை விளக்க உரையில் கோட்டா உறுதி



வடக்கு, கிழக்கில் படையினர் வசமிருந்த காணிக ளில் 90 வீதமானவை விடுவிக்கப்பட்டுள்ளன. நான் பாதுகாப்பு செயலாளராக இருந்தபோதே இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டன. எஞ்சிய காணிகளும் எதிர் காலத்தில் விடுவிக்கப்படும்.

- இவ்வாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

9 ஆவது நாடாளுமன்றத்தின் 2 ஆவது கூட்டத் தொடரை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இன்று ஆரம்பித்து வைத்தார். அதன்பின்னர் நிகழ்த்திய கொள்கை விளக்க உரையிலேயே ஜனாதிபதி இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

☞2



தமிழர் தரப்பின் கடிதம் கொழும்பில் இன்று மாலை இந்தியத் தூதுவரிடம் ஒப்படைக்கப்பட்டபோது.....

## தேனீர் விருந்தை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஜனாதிபதியின் உரையின் தமிழர் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான எந்த அர்த்தபூர்வமான விடயமும் இடம்பெறாமையால், அதை ஆட்சேபித்து இந்தத் தேநீர் விருந்து உபசாரத்தை நிராகரித்தனர் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர்.

## இருவேறு .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சடலத்தை தெஹியோவிட்ட பொலிஸார் மீட்டுள்ளனர்.

அட்டளுகம வடக்கு பிரதேசத்தைச் சேர்ந்த 45 வயது நபரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

குறித்த நபர் காணாமல்போயிருந்த நிலையிலேயே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, களுத்துறை, அளுத்கம பிரதேசத்தில் காணாமல்போயிருந்த பெண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அளுத்கம புளியங்குளம் பிரதேசத்தை சேர்ந்த 57 வயது பெண்ணே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

செங்கல் உற்பத்தி செய்யப்படும் இடத்திலிருந்து குறித்த பெண்ணின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

பிரதேச மக்கள் வழங்கிய தகவலுக்கு அமைவாகவே சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மேற்படி சம்பவங்கள் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## உரையைப் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அழைக்கப்பட்டிருந்தனர்.

இவ்வாறு அழைக்கப்பட்ட மத குருமாருக்கான கலரியில் விசேடமாக இடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. இதில் 16 பௌத்த பிக்குக்கள் கலந்துகொண்ட அதேநேரம் ஒரேயொரு

சைவ மதகுருவும் இரு மௌலவிகளும் கலந்துகொண்டிருந்தனர். இருப்பினும் கத்தோலிக்க மதகுருமார் எவரும் கலந்துகொள்ளவில்லை என்பது அனைவரையும் திரும்பி பார்க்க வைத்த விடயமாகப் பேசப்படுகின்றது.

## கோட்டா பேச்சு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இன்று காலை நாடாளுமன்றத்தில் ஜனா திபதி ஆற்றிய உரை தொடர்பில் தகவல்வெளியிட்ட கூட்டமைப்பு பேச்சாளர் சுமந்திரன் இத்தகவலை வெளியிட்டார். இது தொடர்பில் சுமந்திரன் மேலும் வெளியிட்ட தகவல்கள் வருமாறு:-

ஜனாதிபதியின் பேச்சை செவிமடுத்த கூட்டமைப்பு தலைவர் இரா சம்பந்தன் அதை ஒட்டி இன்று பெரும் கோபம் கொண்டார். பேச்சு முடிந்த கையோடே எழுந்து நாடாளுமன்றில் பகிரங்கமாகத் தம் எதிர்ப்பை பதிவு செய்ய அவர் விரும்பினார். அதற்காக எழுந்தார். எனினும் யோசித்தவர், நாடாளுமன்ற சம்பிரதாயங்களை மீறி நடக்கக் கூடாது என்பதற்காக அப்படி கருத்து தெரிவிப்பதைத் தவிர்த்துக் கொண்டார். எனினும் நாடாளுமன்றை விட்டு வெளியே வரும்போது 'லொபியில் தமக்கு முன்னால் எதிர்ப்பட்ட நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷவிடம் தமது கோபத்தை அவர் காட்டினார்.

"இந்தப் பேச்சு வெறும் குப்பை. உருப்படியாக இதில் எதுவும் இல்லை. இதைப் போய் அவரிடம் சொல்லுங்கள். நான் தேநீர் உபசாரத்திற்கு வரவில்லை. வந்தால் இதை நானே அவருக்கு நேரடியாகக் கூற வேண்டியிருக்கும். அப்படி வேண்டாம் என்பதற்காகத்தான் தேநீர் உபசாரத்தையே தவிர்த்துக்கொண்டிருக்கிறேன். இந்தப் பேச்சு வெறும் குப்பை தவிர வேறு எதுவுமில்லை என்பதை நான் கூறினேன் என்பதை அவரிடம் போய்ச் சொல்லுங்கள். எங்களுடைய நாட்டின் தேசிய பிரச்சினை குறித்து ஏதும் இந்தப் பேச்சில் சொல்லப்படவில்லை. இந்தப் பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால் உங்களுக்கு எதுவும் சரிப்பட்டு வராது. உருப்படவே மாட்டீர்கள் என்பதை அவரிடம் போய்ச் சொல்லுங்கள்" என்று சம்பந்தன் ஐயா சீற்றத்துடன் கூறினார்.

இந்தத் திடீர் தாக்குதலை எதிர்பார்க்காத பஸில் ராஜபக்ஷ விடயத்தைச் சமாளித்து, 'தாங்க்யூ, தாங்க்யூ...!' என்று கூறி அங்கிருந்து அகன்றார். - என்று தகவல் வெளியிட்டார் சுமந்திரன்.

## மிகவும் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாட்டைப் பற்றிப் பேசுகின்றாரா என்ற சந்தேகம் எங்களுக்குள் எழுந்தது. ஒரு பிரச்சினையும் இல்லாத - சுபீட்சமாக வீறுநடை போடுகின்ற ஒரு நாட்டைப் பற்றியே அவர் பேசுவது போல இருந்தது"

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்.

"ஜனாதிபதியின் பேச்சில் தமிழரின் தேசியப் பிரச்சினை குறித்து ஒரு வார்த்தைதன்னும் இல்லை. அவர் சொன்ன தெல்லாம் வடக்கு, கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் தற்காலிகமாகவேனும் தங்கள் கொள்கைகளை ஒரு பக்கம் வைத்துவிட்டு மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக அரசுடன் கைகோர்க்க வேண்டும் என்பதுதான்.

ஏன் கொள்கைகளை ஒரு பக்கத்தில் வைக்க வேண்டும்? இது எங்கள் கொள்கை இல்லை, மக்களின் கொள்கை. அதற்கான ஆணையை கொடுத்தவர்கள் மக்கள்தான். அது அவர்களின் கொள்கை. நாங்கள் மக்கள் பிரதிநிதிகளாக வந்ததே இந்தக் கொள்கையின் அடிப்படையில் தான். ஆகவே மக்களின் தேவையைப் பூர்த்தி செய்வது ஒன்று, கொள்கை வேறொன்று என்று இல்லை. மக்களின் கொள்கையைத்தான் பூர்த்தி செய்யவேண்டும் ஆகவே அந்தக் கொள்கைகளை நாம் ஒரு பக்கத்தில் வைக்க வேண்டிய தேவை ஏதும் இல்லை. அந்த விடயம் கூட ஜனாதிபதிக்குப் புரிந்த மாதிரித் தெரியவில்லை. - என்றார் சுமந்திரன்.

## போதைப்பொருள் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பிரிவுக்கான குற்றப் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது 6 கிராம் 408 மில்லிகிராம் ஹெரோயினுடன்ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அநுராதபுரம் பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயது நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, கொழும்பு கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஒருகொடவத்தைப் பிரதேசத்தில், பொலிஸ் விசேட அதிரடிப் படையினரின் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது 6 கிராம் 200 மில்லிகிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். ஒருகொடவத்த பிரதேசத்தைச் சேர்ந்த 40 வயது நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, கொழும்பு, பேலியகொடை - நெல்லிகலவத்த பிரதேசத்தில், பேலியகொடை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்ட சுற்றிவளைப் பின்போது 2 கிராம் 450 மில்லிகிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மட்டக்குளிய, கிராண்ட்பாஸ் மற்றும் தெமட்டகொடை ஆகிய பிரதேசங்களில் வீடுகளில் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்ட நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதன்போது குறித்த நபர் திருடினார் எனக் கூறப்படும் தங்க நகை, 4 தொலைபேசிகள் என்பவற்றைக் குற்றப் புலனாய்வு அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

கிராண்ட்பாஸ் பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயது நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## வடக்கு, கிழக்கில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொரோனாப் பெருந்தொற்றிலிருந்து எமது மக்களைக் காக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. பொது முடக்கத்தால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டது. அரச ஊழியர்களின் சம்பளம் குறைக்கப்படவில்லை. தனிமைப்படுத்தல் நிலையங்கள் அமைக்கப்பட்டன. வைத்தியசாலை கட்டமைப்புக்கு சுமார் 35 ஆயிரம் கட்டில்கள் இணைக்கப்பட்டன.

தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு 10 ஆயிரம் ரூபா நிவாரணப் பொதி வழங்கப்பட்டது.

மாறுபட்ட அரசியல் நிலைப்பாடுகள் இருந்தாலும் நாட்டின் நன்மைதான் அனைவரினதும் இலக்கு. எனவே, அரசியல் பேதங்களுக்கு அப்பால் நாட்டை முன்னோக்கி அழைத்துச் செல்ல எதிரணிகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

ஐந்தாண்டுகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பில் மக்களுக்கு உறுதிமொழிகள் வழங்கப்பட்டன. கொரோனாவால் இரண்டு ஆண்டுகள் பல தடைகள் ஏற்பட்டன. ஆனாலும் எமது பொறுப்பை நாம் மறக்கவில்லை.

நான் ஆட்சிக்கு வரும்போது தேசிய பாதுகாப்புதான் பிரச்சினையாக இருந்தது. அந்தப் பாதுகாப்பை உறுதிப்படுத்தினேன். பாதாளக் கோஷ்டியின் அச்சுறுத்தலுக்கு முடிவு கட்டினேன். மக்கள் சுதந்திரமாக வாழக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது - என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம்-
076 443 8622

மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள

076 443 8619 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தீர்வுக்கு மருந்து எது?

நோயின் வெளிப்பாடுகளுக்கு மருந்து செய்வதில் அர்த்தமில்லை. அது அப்போதைய உபாதையைக் குறைக்கும். அவ்வளவுதான். நோயைத் தீர்ப்பதானால் அதற்கு நோய் இன்னதென்று ஆராய்ந்து, அதன் காரணத்தைக் கண்டறிந்து, அதைத் தணிக்கும் வழியை உணர்ந்து, அதனை உடலுக்குப் பொருந்தும்படியாகச் செய்ய வேண்டும். அதனையே –

'நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்'

– என்றான் திருநாப்போதகன் திருவள்ளுவன்.

மிக மோசமான பொருளாதார நெருக்கடி என்ற நோய் முற்றிய நிலையில் நாடு துவண்டு போய்க் கிடக்கின்றது. அதற்கு உரிய மருந்துகள் செய்ய வேண்டிய பாரிய பொறுப்பு நாட்டின் தலைவர் என்ற முறையில் ஜனாதிபதி கோட்டாபய மீது வீழ்ந்துள்ளது.

நாட்டுக்கு உரிய – சீரிய – மருத்துவம் மேற்கொள்ளப் பட்டு, சரியான சிகிச்சை அளிக்கப்பட்டு, அது தேறி வரவேண்டுமானால் முதலில் நோயின் மூலம் – காரணி – யாது என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும். அந்தக் காரணத்துக்குச் சரியான மருத்துவம் – சிகிச்சை – அளித்தால்தான் நாடு தேறி மேம்படும்.

தன்னுடைய குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக – தமது தரப்பின் சின்னத்தனமான பேரினவாதப் போக்குக் காரணமாக – பௌத்த, சிங்கள இனவெறி மேலாண்மைப் போக்குப் பண்பியல்பு காரணமாக – நாட்டின் பிரச்சினைகளுக்கான அடிப்படைகளை நோக்க மறந்து – மறுத்து – வேறு எது, எதற்கோவெல்லாம் மருத்துவம் செய்ய முற்படுகின்றார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ. அவரின் இன்றைய நாடாளுமன்ற உரை – அவரது அரசின் கொள்கை விளக்கப் பிரகடனப்போக்கு – அதனை அப்பட்டமாக வெளிப்படுத்தி நிற்கின்றது.

நாட்டில் திடீரென ஏற்பட்ட கொரோனாப் பேரிடரால்தான் – அதனால் மட்டும்தான் – இந்தப் பொருளாதார நெருக்கடி என்று ஒரு கணக்குக் காட்டப் பார்க்கின்றார் அவர்.

நாடு ஏதோ சுபீட்சத்தில் இருப்பது போலவும் கயிறு விடுகின்றார்.

கொரோனா நெருக்கடியை ஒட்டிய சிக்கல்களைத் தீர்த்துக் கொண்டால் நாடு சுபீட்சமான பாதைக்கு வந்து விடும் என்பது போல அவர் கதைவேறு விடுகின்றார்.

நாட்டின் தேசிய இனப்பிரச்சினையை நீதி, நியாய மான முறையில் தீர்க்காமல், அதை பௌத்த, சிங்களப் பேரினவாத வெறிக் கண்ணோடு நோக்கி, அடக்குமுறை மூலம் சிறுபான்மையினரின் நியாயமான அபிலாஷை களை கக் கட்டுப்படுத்தி விடலாம் என்ற கனவில் பேரின வாதிகள் நடந்து கொண்டமையின் விளைவுகள்தான் நாட்டின் இந்தப் பேரவல நிலைமைக்கு அடிப்படைக் கார ணம்.

அதனைப் புரிந்து கொள்ளாமல் – அல்லது புரிந்து கொள்ள விரும்பாமல் – வேறு ஏதேதோ பிதற்றுகின்றார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

அதனால்தான் அவரது இந்த நாடாளுமன்ற உரையை – கொள்கை விளக்கப் பேச்சை – 'வெறும் குப்பை என்று ஏசுகின்றார் கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தன். மிக மிக மட்டரகமான உரை' என்கின்றார் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன்.

சம்பந்தன் குறிப்பிடுகின்றமை போல தேசிய இனப் பிரச்சினைக்கான அடிப்படைகளை – மூலாதாரமான காரணங்களை – வரலாற்றுத் தவறுகளை – கணக்கில் எடுத்து, அவற்றிலிருந்து நாட்டையும் மக்களையும் சரி யாக வழிநடத்தும் ஒரு போக்கை ஜனாதிபதி முன்னெடுக் கும் வரை இந்த நாடு உருப்படப் போவதில்லை என்பது உண்மைதான்.

நாடு சுபீட்சத்துடன் தப்பிப் பிழைப்பதா அல்லது அழிவை நோக்கிப் பயணிப்பதா என்பதை இனிமேல் ராஜபக்ஷக் கள் தான் தான் முடிவு செய்ய வேண்டும்.

# கூட்டாகத் திருடுவதே பொதுக் கொள்கை ஆட்சியாளர்களின் 73 ஆண்டுகால சாதனை!

### சுனில் ஹந்துன்னெத்தி குற்றச்சாட்டு



கூட்டாக இணைந்து திருடுவதே ஆட்சியாளர்களின் பொதுக்கொள்கையாக அமைந்துள்ளது என ஜே.வி.பி.யின் சிரேஷ்ட உறுப்பினர் சுனில் ஹந்துன்னெத்தி குற்றம் சுமத்தியுள்ளார். மாத்தறையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்தெரிவித்தவை வருமாறு–

கடந்த 73 ஆண்டுகளாக ஆட்சியாளர்களின் பொதுக் கொள்கை கூட்டாக இணைந்து திருடுவது மட்டுமே யாகும். பிணை முறிமோசடிகள் தொடர்பில் நான் கோப் குழு ஊடாக விசாரணை செய்தேன். ரணிலின் ஆட்சிக் காலத்தில்ஆரம்பித்தேன். இந்த விசாரணைகள் நடத்தப்படும்போது இதனுடன் தொடர்புடையவர்கள் யார் தெரியுமா முன்னைய ஆட்சியாளர்கள்.

பிணைமுறி மோசடி விசாரணைகளின் போது ரணில் தரப்புக்கு முன்னர் ஆட்சி செய்த மஹிந்த தரப்பின் அஜித் நிவாட் கப்ரால் போன்றோர் பற்றிய விவரங்கள் கிடைக்கப்பெற்றன.

இவ்வாறு ஒரு பிரச்சினை பற்றி விசாரணை நடத்தும் போது அதற்கு முன்னைய ஆட்சியாளர்களின் தவறுகள் அம்பலமாகின்றன.

அனைவரும் நல்ல நண்பர்கள், எந்த விடயத்தைப் பற்றி விசாரணை செய்தாலும் அனைவரும் அதில் தொடர்பு பட்டிருக்கின்றனர்.

ஸ்ரீலங்கன் விமான சேவை கோடிக்கணக்கில் நட்டமடைந்திருந்தது. ஒரு தரப்பினர் எயார்பஸ்களை விற்பனை செய்துள்ளனர். பின்னர் ஆட்சி செய்த ரணில் தரப்பினர் அதனைக் கொள்வனவு செய்து மோசடி செய்துள்ளனர். திருடுவதில் இவர்களுக்கு எவ்வித பேதமும் இல்லை, அதற்காக இவர்கள் பொதுக் கொள்கை யொன்றை வகுத்துக்கொண்டுள்ளனர் என சுனில் ஹந்துனெத்தி குற்றம் சுமத்தியுள்ளார்.

# இலங்கையின் முக்கிய வைரஸாக மாறுகின்றது ஒமிக்ரோன் தொற்று?

### கலாநிதி சந்திம ஜீவந்தர எச்சரிக்கை



டெல்டாவை முந்திக்கொண்டு ஒமிக்ரோன் திரிவு வேகமாக பரவும் நிலை காணப்படுவதால் இலங்கையின் முக்கிய வைரஸாக ஒமிக்ரோன் வைரஸை தற்போது குறிப்பிடமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீட ஒவ்வாமை, மூலக்கூறு நுண்ணுயிர் பிரிவின் தலைவரான கலாநிதி சந்திம ஜீவந்தர இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

நாட்டில் இதுவரை 208 ஒமிக்ரோன் தொற்றுநோயாளிகள் இனங்காணப்பட்டுள்ள நிலையிலேயே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

புதிதாக இனங்காணப்பட்டுள்ள ஒமிக்ரோன் வைரஸ் தொற்றுநோயாளர்களில் பெரும்பாலானோர் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து வெளிநாடுகளுக்குச் செல்வதற்காக வந்திருந்தவர்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

குறித்த அனைவரும், கொழும்பு, கம்பஹா, காலி, மாத்தறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களை வதிவிடமாகக் கொண்டவர்கள் என்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# அரசு தவறான திசையில் பயணிக்குமானால் சுட்டிக்காட்டும் உரிமை சு.கவுக்கு உண்டு!

### நிமல் சிறிபால டி சில்வா கூறுகிறார்



அரசின் காலை வாருவதற்கும், பயணத்தைத் தடுப்பதற்கும் நாம் தயாரில்லை என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உபதலைவரும் அமைச்சருமான நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில் தெரிவித்தவை வருமாறு –

இந்த அரசு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி கட்சிக்கு மட்டும் சொந்தமானது அல்ல. நாமும் அரச பங்காளிகள்தான். வெற்றியில் எமக்கும் பங்குண்டு.

எனவே, அரசின் பயணத்தைத் தடுப்பதற்கும், காலை வாருவதற்கும் நாம் தயாரில்லை. அரசு தவறான திசையில் பயணிக்குமானால் அதனைத் தைரியமாகச் சுட்டிக்காட்டும் உரிமை எமக்கு இருக்கின்றது. – என கூறியுள்ளார்.

# தேங்காய் எண்ணெய் விலை கட்டுமட்டின்றி எகிறுகின்றது!

இலங்கையில் தேங்காய் மற்றும் தேங்காய் எண்ணெய் விலை கட்டுப்பாடின்றி அதிகரித்து வருவதாக எண்ணெய் உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஒரு லீற்றர் தேங்காய் எண்ணெயின் மொத்த விற்பனை விலை 600 ரூபாவிலிருந்து 670 ரூபாவாக அதிகரித்துள்ளது.

மேலும் தேங்காயின் விலை 65 - 85 ரூபாவரை அதிகரித்துள்ளதாகவர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

வெளிநாடுகளில் இருந்து பாம் எண்ணெய் இந்த நாள்களில் இறக்குமதி செய்யாமையால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

தேங்காய் எண்ணெய் உற்பத்திக்குக் கொப்பரை இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்து வழங்குமாறு எண்ணெய் உற்பத்தியாளர்கள் அண்மையில் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

எனினும் அந்தத் தேவை பூர்த்தி செய்யப்படாததால், சந்தையில் தேங்காய் எண்ணெய், தேங்காய் ஆகியவற்றின் விலை அதிகரித்து வருவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

காலைக்கதிர் மாலைப்பதிப்பு





# ஒரே தளத்தில் 2 விமானங்கள்; கடைசி நேரத்தில் விபத்து தவிர்ப்பு

துபாய் விமான நிலையத்தில் இரண்டு பயணியர் விமானம் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாக இருந்த சம்பவம் கடைசி நேரத்தில் தவிர்க்கப்பட்டது.

வளைகுடா நாடுகளில் ஒன்றான ஐக்கிய அரபு எமிரேட்சின் துபாயில் இருந்து, நம் நாட்டின் தெலுங்கானாவின் ஹைதராபாத் நோக்கி, 'எமிரேட்ஸ் இகே - 524' ரக பயணியர் விமானம் கடந்த 9ம் திகதி இரவு புறப்படத் தயாரானது. அதேநேரத்தில் துபாய் - பெங்களூரு இடையிலான 'எமிரேட்ஸ் இகே - 568' ரக விமானமும் புறப்பட தயாரானது. இந்த இரண்டு விமானங்களும் 5 நிமிட இடைவெளியில் புறப்படுவது வழக்கம். துபாய் - ஹைதராபாத் விமானம் புறப்படுவதற்காக ஓடுதளத்தில் அதிவேகமாக வந்த போது, எதிரில் துபாய் - பெங்களூரு விமானம் புறப்பட தயாராகி வந்து கொண்டிருந்தது. உடனடியாக சுதாரித்த கட்டுப்பாட்டு அறை அதிகாரிகள் துபாய் - ஹைதராபாத் விமானத்தின் புறப்பாடை நிறுத்தும்படி உத்தரவிட்டனர்.

இதையடுத்து அந்த விமானம் ஓடுதளத்தை விட்டு பாதுகாப்பாக வெளியேறி மற்றொரு விமானத்துக்கு வழிவிட்டது. அந்த ஓடுதளத்தில் இருந்து துபாய் - பெங்களூரு விமானம் புறப்பட்டுச் சென்றது. கடைசி நேர எச்சரிக்கையால் மிகப் பெரிய விமான விபத்து தவிர்க்கப்பட்டது. இந்த சம்பவம் தொடர்பாக விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. ஹைதராபாத் புறப்பட இருந்த விமானம் ஒப்புதல் கிடைக்கும் முன்னரே புறப்பட தயாரானது குழப்பத்துக்கு காரணமாக கூறப்படுகிறது.

# ஆளில்லா விமானம் அபுதாபியில் தாக்கு 3 பேர் உயிரிழப்பு



அபுதாபி விமான நிலையத்திற்கு மூன்று எரிபொருள் டிரக்குகள் மீது நடத்தப்பட்ட ஆளில்லா விமானத் தாக்குதல்களில், மூன்று பேர் உயிரிழந்துள்ளமையோடு ஆறு பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்று (திங்கட்கிழமை) எண்ணெய் நிறுவனமான ADNOC இன் சேமிப்பு வசதிகளுக்கு அருகிலுள்ள தொழில்துறை முசாஃபா பகுதியில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டது.

கொல்லப்பட்டவர்களில் இரண்டு இந்தியர்கள் மற்றும் ஒரு பாகிஸ்தானியர் என அடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. காயமடைந்த ஆறு பேருக்கு லேசான காயம் முதல் நடுத்தர வரையிலான காயங்கள் உள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

புதிய அபுதாபி விமான நிலையத்தில் எரிபொருள் ஏற்றிச் சென்ற மூன்று டேங்கர்களை குறி வைத்து ஹௌதி கிளர்ச்சியாளர்களால் இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக கூறப்படுகிறது.

மூன்று எண்ணெய் டேங்கர்களில் தீ மற்றும் வெடிப்பு ஏற்பட்டதாகவும், ஐக்கிய அரபு அமீரகத்தின் புதிய விமான நிலையத்தின் கட்டுமான தளத்தில் தீ விபத்து ஏற்பட்டதாகவும் அபுதாபி பெலிஸார் தெரிவித்துள்ளது.

சமூக ஊடகங்களில் சரிபார்க்கப்படாத காட்சிகள், முசாஃபா பகுதியில் இருந்து வெளிவரும் கரும்புகையின் அடர்த்தியான புகையைக் காட்டியது.

ஆரம்ப விசாரணையில், வெடிப்பு மற்றும் தீ விபத்தை ஏற்படுத்தக்கூடிய இரு தளங்களிலும் ஆளில்லா விமானமாக இருக்கக்கூடிய சிறிய விமானத்தின் பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டன,' என்று அபுதாபி பொலிஸார் ஒரு அறிக்கையில் தெரிவித்தனர்.

ஐக்கிய அரபு அமீரகத்தை உள்ளடக்கிய சவுதி தலைமையிலான கூட்டணியை எதிர்த்துப் போராடும் யேமனின் ஈரானுடன் இணைந்த ஹௌதி கிளார்ச்சியா ளர்கள் இயக்கம், சவுதி அரேபியா மீது அடிக்கடி எல்லை தாண்டிய ஏவுகணை மற்றும் ஆளில்லா விமானத் தாக்குதல்களை நடத்தி வருகின்றது.


இதுபோன்ற சில தாக்குதல்களை ஐக்கிய அரபு அமீரகம் மீதும் தொடுத்ததாக கூறப்படுகின்றது. ஆனால், இதனை அமீரக அதிகாரிகள் மறுத்துள்ளனர்.

# லண்டனில் புதிய அலுவலகம் வாங்கிய கூகுள்




கூகுள் நிறுவனம் லண்டனில் புதிய அலுவலகம் அமைப்பதற்காக 7 ஆயிரத்து 500 கோடி (இந்திய மதிப்பில்) ரூபாயில் பிரம்மாண்ட கட்டடம் ஒன்றை விலைக்கு வாங்கியுள்ளது.

தற்போது அதே கட்டடத்தில் கூகுள் வாடகைக்கு செயல்பட்டு வருகிறது. இங்கிலாந்தில் 6 ஆயிரம் 400 ஊழியர்களை கொண்டுள்ள கூகுள், விரைவில், எண்ணிக்கையை 10ஆயிரமாக உயர்த்த திட்டமிட்டுள்ளது. இதையடுத்து இந்த செயின்ட் கில்ஸ் கட்டடத்தை, ஊழியர்கள் வசதியாக பணியாற்றும் வகையில் புதுப்பிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், இதன் வளாகத்தில் காற்றோட்டத்துடன் பணியாற்றும் வகையிலும் புதிய வசதிகள் செய்யப்பட உள்ளதாக, கூகுள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது




# கடும் வெப்பமான ஆண்டாக '2021' பதிவு

உலகில் மிக அதிக வெப்பம் மிகுந்த ஆறாவது ஆண்டாக 2021 வகைப்படுத்தப்பட்டுள்ளது. புதிய தகவல்கள் அதற்குச் சான்றாய் அமைந்திருப்பதாக, அமெரிக்கப் பருவநிலை ஆய்வாளர்கள் கூறினர். உலக மக்கள் தொகையில் சுமார் கால்வாசிப் பேர் கடந்த ஆண்டு கடுமையான வெப்பத்தால் பாதிக்கப்பட்டனர்.

தெற்காசியா, வட அமெரிக்கா, தென்னமெரிக்கா ஆகிய வட்டாரங்களில் கடந்த ஆண்டு சூரியன் சுட்டெரித்தது.

ஆர்க்டிக்கில் மீண்டும் அதிகமான பனி உருகியது. உலக சாராசரியை விட ஆர்க்டிக், மும்மடங்கு அதிகம் சூடாவதாக நாசா ஆய்வு நிறுவனம் கூறியது.

காடுகளை அழித்தல், படிம எரிபொருள் பயன்பாடு போன்ற நடவடிக்கைகளைக் குறைக்காவிட்டால் நிலைமை மேலும் கடுமையாகலாம் என்று ஆய்வாளர்கள் எச்சரித்தனர். கடந்த ஆண்டைப் போலவே இந்த ஆண்டும் வெப்பம் அதிகமாக இருக்கலாம் என்று எதிர்வுகூறப்பட்டுள்ளது.

# கடலுக்கு அடியில் எரிமலை வெடிப்பு; சாம்பல் வெளியேறுவதாக தகவல்

கடலுக்கு அடியில் ஏற்பட்ட பாரிய எரிமலை வெடிப்பு காரணமாக டொங்கா மற்றும் நியூசிலாந்து உள்ளிட்ட சில நாடுகளுக்கு ஆழிப்பேரலை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

டொங்காவிலுள்ள பல வீடுகள் உள்ளிட்ட கட்டட தொகுதிகளுக்குள் கடல் நீர் நுழையும் காணொளி காட்சிகள் சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ளன. அந்த நாட்டு தலைநகரில் கடலில் இருந்து சாம்பல் வெளியேறுவதாக சர்வதேச தகவல்கள் தெரிவிக்கின்றன.

பசுபிக் தீவுகளில் வாழ்பவர்களை உயரமான இடங்களுக்குச் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் அமெரிக்க சமோவா பகுதிக்கும் அமெரிக்கா ஆழிப் பேரலை எச்சரிக்கையை விடுத்துள்ளது.



# 12 முதல் 14 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு தடுப்பூசித் திட்டம் மார்ச் மாதம் ஆரம்பம்

கொரோனாவைரஸ்பரவலைக் கட்டுப்படுத்த நாடுதழுவிய அளவில் தேசிய தடுப்பூசித் திட்டத்தை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கடந்த ஆண்டு ஜனவரி 16ஆம் திகதி தொடங்கி வைத்திருந்தார். அதன் தொடர்ச்சியாக கடந்த 3 ஆம் திகதியிலிருந்து 15 வயது முதல் 18 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கும் தடுப்பூசி செலுத்தப்பட்டு வருகிறது.

இந்தியாவில் கொரோனாத் தடுப்பூசித் திட்டம் தொடங்கப்பட்டு ஓர் ஆண்டு முடிவடைந்துள்ள நிலையில், நாடு முழுவதும் 93 சதவீதம் பேர் முதல் தவணைத் தடுப்பூசியையும், 69.8 சதவீதம் பேர் இரண்டு தவணைத் தடுப்பூசிகளையும், 43.19 லட்சத்துக்கும் மேற்பட்டோர் பூஸ்டர் தடுப்பூசியையும் செலுத்திக் கொண்டுள்ளனர் எனத்தரவுகள்தெரிவிக்கின்றன.

15 முதல் 18 வயதுக்குட்பட்டவர்களில் 3.38 கோடி பேர், முதலாவது தவணைத் தடுப்பூசியைச் செலுத்திக் கொண்டுள்ளனர்.

15 வயது முதல் 18 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கான முதல் தவணைத் தடுப்பூசி செலுத்தும் பணி இந்த மாத இறுதியில் முடிவடையும் என்றும் மொத்தம் 7.4 கோடி சிறுவர்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டிருக்கும் என்றும் கணிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் 12 வயது முதல் 14 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கும் தடுப்பூசி செலுத்தப்படவிருப்பதாக மத்திய சுகாதாரத் துறை அறிவித்துள்ளது. இந்தத் திட்டம் பெப்ரவரி இறுதி அல்லது மார்ச் மாதத்தில் ஆரம்பமாகும் என்று கொரோனா நோய் தடுப்புக்கான தேசிய தொழில்நுட்ப ஆலோசனை குழுவின் தலைவர் வைத்தியர் என். கே.அரோரா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தகவல் வழங்கியபோது, ஜனவரி இறுதிக்குள் 15 முதல் 18 வயதுக்குட்பட்ட 7.4 கோடி சிறுவர்களுக்கு முதல் டோஸ் செலுத்த இலக்கு வைத்துள்ளோம். பெப்ரவரி மாதத் தொடக்கத்தில் இருந்து இரண்டாவது டோஸ் தடுப்பூசி செலுத்தும் பணி ஆரம்பிக்கப்பட்டு, அம்மாத இறுதிக்குள் அதை முடிக்கத் திட்டமிட்டுள்ளோம். அடுத்ததாக, 12 வயது முதல் 14 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு பெப்ரவரி இறுதி அல்லது மார்ச் மாத தொடக்கத்தில் தடுப்பூசி நடைமுறைப்படுத்த இருக்கிறோம்.

15 முதல் 18 வயதுக்குட்பட்டவர்களுக்கு இரண்டாவது டோஸ் செலுத்திய பிறகு இந்தத் திட்டம் ஆரம்பமாகும். இளம் பருவத்தினருக்கு தடுப்பூசி செலுத்துவது முக்கியமாகும். அவர்கள் பாடசாலைகள், கல்லூரிகளுக்குச் சென்று ஒன்றிணைந்து தொற்று நோயைப் பெறுவதற்கான அதிக ஆபத்தில் உள்ளனர், என்று தெரிவித்துள்ளார்.

இந்திய குழந்தை மருத்துவ நிறுவகத்தின் முன்னாள் தலைவர் வைத்தியர் பிரமோத் சோக் கூறும் போது, குழந்தைகளுக்கான தடுப்பூசி வரம்பை உயர்த்துவது வரவேற்கத்தக்கதாகும். 5 முதல் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு தடுப்பூசி போடுவதற்கு முன்னுரிமை அளிப்பதை அரசு பரிசீலனை செய்யவேண்டும்' என்று குறிப்பிட்டுள்ளார்.

# தமிழக அலங்கார ஊர்திக்கு மறுப்பு ஏமாற்றம் பிரதமருக்குத் தமிழக முதலமைச்சர் கடிதம்



குடியரசுத் தின விழாவை முன்னிட்டு தலைநகர் புதுடெல்லியில் வரும் 26 ஆம் திகதி பிரமாண்ட அணிவகுப்பு நடைபெறவிருக்கிறது. இதில் அனைத்து மாநிலங்களினதும் சார்பில் கலை, பண்பாட்டு அலங்கார ஊர்திகள் இடம் பெறுகின்றமை வழக்கம். ஆனால், இந்த ஆண்டு குடியரசுத் தின நிகழ்வில் தமிழக ஊர்தி பங்கேற்க அனுமதி வழங்கப்படவில்லை.

கொரோனாப் பெருந்தொற்று உள்ளிட்ட பல்வேறு காரணங்களால், நிகழ்வில் பங்கேற்கும் மாநிலங்களின் எண்ணிக்கை 12 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது என கட்டுப்பாடுகள் குறித்து இந்திய மத்திய அரசு விளக்கம் அளித்துள்ளது. அதேவேளை, தமிழக ஊர்திக்கு அனுமதி மறுக்கப்பட்டதற்கு பல்வேறு தரப்பினரும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், பிரதமர் நரேந்திர மோடிக்கு இந்த விடயம் தொடர்பாகக் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். அதில், குடியரசுத் தின அணிவகுப்பில் தமிழ்நாட்டிலிருந்து நாட்டின் விடுதலைக்காகப் போராடிய வ.உ.சி., மகாகவி பாரதியார், இராணி வேலுநாச்சியார், மருது சகோதரர்கள் ஆகிய விடுதலைப் போராட்ட வீரர்களின் உருவங்கள் அடங்கிய ஊர்தி இடம்பெறுவது மறுக்கப்பட்டு இருப்பது ஏமாற்றம் அளிக்கிறது என்றும், பிரதமர் இதில் உடனே தலையிட்டு விடுதலைப் போராட்ட வரலாற்றில் தமிழ்நாட்டின் பங்களிப்பு குறித்து வெளிக்கொணரும் கலையம் சங்களைத் தாங்கிய ஊர்தி இவ்வருட அணிவகுப்பில் இடம்பெறுவதை உறுதி செய்ய வேண்டும், என்று கோரிக்கை விடுத்துள்ளார்.

# குடியரசுத் தின விழாவையொட்டி தலைநகரில் பல அடுக்கு பாதுகாப்பு

எதிர்வரும் 26 ஆம் திகதி இந்தியாவில் குடியரசு தின விழா கொண்டாட்டங்கள் நடைபெறவிருக்கின்றன. தலைநகர் புதுடெல்லியில் முப்படைகளின் அணிவகுப்பு உட்பட சிறப்பு நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்தநிலையில் காசிப்பூர் மலர் சந்தையில் வெடிபொருள் கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து, டெல்லியில் பல அடுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகளோடு, முக அடையாளம் காணும் அமைப்புகளும் நிறுவப்பட்டுள்ளன.

இது தொடர்பாக டில்லியின் பொலிஸ் அதிகாரி தீபக் யாதவ் தகவல் தெரி விக்கும்போது, பயங்கரவாத அச்சுறுத்தல் தவிர, கொரோனாப் பரவலும் பாதுகாப்பில் ஈடுபட்டுவரும் படையினருக்கு பெரும் சவா லாக உள்ளது. புது டில்லி பகுதியிலும் அதைச் சுற்றியுள்ள விடுதிகளிலும் தங்கியிருப்பவர்கள் மற்றும் குடியரசுத் தின நிகழ்வின் பார்வையாளர்களைக் கண்காணிக்கும் செயல் முறையை நாங்கள் தீவிரப்படுத்தியுள்ளோம். ட்ரோன் எதிர்ப்புக் குழுவும் நிறுவப்பட்டுள்ளது. பாதுகாப்பு வலையைத்தை மீறும் எந்தவொரு பறக்கும் பொருளும் கண்காணிக்கப்படும்.

ராஜபாதை மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் 300 கண்காணிப்பு கமராக்கள் நிறுவப்பட்டுள்ளன. 50 ஆயிரம் சந்தேகத்திற்குரிய குற்றவாளிகள் குறித்த விபரங்கள் இந்தச் சாதனங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ளன. கொரோனாக் கட்டுப்பாடுகள் காரணமாக அணிவகுப்பைப் பார்வையிட 4 ஆயிரம் நுழைவுச்சீட்டுகள் மட்டுமே வழங்கப்படவுள்ளன என்று கூறியுள்ளார்.






# நீட் தேர்வில் இருந்து விலக்குத் தொடர்பாக அமித்ஷாவைச் சந்தித்த தமிழக எம்.பிக்கள்

நீட் தேர்வில் இருந்து தமிழகத்திற்கு விலக்கு அளிக்க வகை செய்யும் மசோதாவுக்கு ஆளுநர் இதுவரை ஒப்புதல் அளிக்காத நிலையில், இது தொடர்பாக ஜனாதிபதி அலுவலகத்தில் தமிழக எம்.பிக்கள் மனுவைக் கையளித்திருந்தனர். அதன் பின்னர் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவைச் சந்திக்க டி.ஆர்.பாலு தலைமையில் தமிழக எம்.பிக்கள் கோரிக்கை விடுத்த போதும் அதற்கான வாய்ப்பு அவர்களுக்கு வழங்கப்படவில்லை.

அதன்பின்னர், நீட் தேர்வில் இருந்து விலக்குப் பெற மத்திய அரசைத் தொடர்ந்து வலியுறுத்துவது என்றும், சட்ட ரீதியாக இதை அணுகுவது என்றும் தமிழக அனைத்துக் கட்சி எம்.எல்.ஏக்கள் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. இந்த நிலையில் நேற்றைய தினம், மாலை 4.30 மணிக்கு தமிழக எம்.பிக் அமித்ஷா நேரம் வழங்கியமையை யடுத்து, தமிழக அனைத்துக் கட்சி எம்.பிக்கள் குழுவினர் டி.ஆர்.பாலு தலைமையில் அவரைச் சந்தித்து, உரையாடியிருந்தனர். அப்போது, நீட் தேர்வில் இருந்து தமிழகத்திற்கு விலக்குப் பெறுவது தொடர்பான மனுவையும் அவரிடம் கையளித்தனர்.

இந்த சந்திப்புக்குப் பின்னர் ஊடகவியலாளர் மத்தியில் தகவல் வழங்கிய டி.ஆர்.பாலு எம்.பி., நீட் தேர்வு விலக்கை உடனடியாக செயற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை மனுவை மத்திய அமைச்சர் அமித்ஷாவிடம் கொடுத்திருக்கிறோம். மத்திய சுகாதாரம் மற்றும் கல்வித்துறை அமைச்சர்களுடன் கலந்துரையாடிய பிறகு, தமிழக முதல்வருக்கு தீர்வைத் தெரிவிப்பேன் என அமித் ஷா உறுதி அளித்திருக்கிறார் என்று தெரி



# அட்டாளைச்சேனையில் பெற்ரோல் குண்டு தாக்குதல்

அட்டாளைச்சேனை பகுதியில் பொறியியலாராக கடமையாற்றி வரும் அப்துல் மனாப் மபாயிஸ் என்பவரது இல்லத்திற்கு நேற்று திகதி அதிகாலை 2 மணியளவில் இனந்தெரியாத நபர்களால் பெற்றோல் குண்டுத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு கல் வீசி உடமைகளுக்கும் சேதம் விளைவிக்கப்பட்டுள்ளது.

பொறியியலாளராக கடமையாற்றி வரும் அப்துல் மனாப் மபாயிஸ்என்பவரை இலக்குவைத்துமேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலால் அவ்விடத்தில் தங்கியிருந்த அவரின் சகோதரர்கள் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளனர்.

வீட்டின் உரிமையாளரான மபாயிஸ் உடனான தனிப்பட்ட தகராறுகளே சம்பவத்துக்குக் காரணமாக இருக்கலாம் என நம்பப்படுகிறது.

## கிண்ணியா நகர, பிரதேச சபைகளின் புதிய தவிசாளர்கள் தெரிவில் போட்டி

திருகோணமலை – கிண்ணியா நகர சபை, கிண்ணியா பிரதேச சபை ஆகிய இரு சபைகளின் வரவு செலவு திட்டம் நிறை வேற்றப்படாமல் தோல்வியடைந்ததால் புதிய தவிசாளர் தெரிவு இடம் பெறவுள்ளதாக வர்த்தமானி ஊடான அறிவித்தல் மூலமாக தெரிவிக்கப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் என்.மணிவண்ணன் அறிவித்துள்ளார்.

இந்த இரு சபைகளின் புதிய தவிசாளர் தெரிவு நாளை மறுதினம் 20 ஆம் திகதி வியாழக்கிழமை உரிய சபை மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

கிண்ணியா நகர சபையின் புதிய தவிசாளர் தெரிவு காலை 9.30 மணிக்கும், கிண்ணியா பிரதேச சபையின் புதிய தவிசாளர் தெரிவு காலை 11 மணிக்கும் இடம் பெறவுள்ளதாக வர்த்தமானி அறிவித்தல் மூலமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த இரு சபைகளின் தவிசாளர் தெரிவு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தலைமையில் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது தவிர சபை உறுப்பினர்களுக்கு இடையில் அதிகார போட்டி நிலவி வருகிறது.

யார் அந்த தவிசாளர் கதிரையை அலங்கரிக்கப் போகின்றனர் என்ற எதிர்பார்ப்பு கட்சிகளுக்கிடையே பெரும் பரபரப்பை தற்போது ஏற்படுத்தியுள்ளது.

### திருகோணமலை குச்சவெளியில்

## பெண்ணொருவரை துஷ்பிரயோகம் சந்தேக நபருக்கு மறியலில்

திருகோணமலை மாவட்டம் குச்சவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பெண்ணொருவரை துஷ்பிரயோகத்திற்குட்படுத்திய சந்தேக நபர் ஒருவரை இம்மாதம் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதிவான் நேற்று திங்கட்கிழமை உத்தரவிட்டார்.

நாவற்சோலை, கும்புறுப்பிட்டி பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய ஒருவரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். சந்தேக நபர் நாவற்சோலை பகுதியைச் சேர்ந்த தனிமையில் இருந்த இளம் பெண்ணொரு வரை துஷ்பிரயோகத்திற்குட் படுத்தியதாக தெரிவித்து குச்ச வெளி பொலிஸ் நிலையத்தில் மேற்கொண்ட முறைப்பாட்டுக்கமைய சந்தேக நபரை கைது செய்த பொலிஸார் திருகோணமலை நீதிமன்ற பதில் நீதிவான் வாசஸ்தலத்தில் ஆஜர் படுத்திய போதே விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை குச்சவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஓட்டமாவடி பிரதேச சபையின் நிர்ணய விலையை கண்டித்து

## மாட்டிறைச்சி கடைகளுக்கு பூட்டு




கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபை, மாட்டிறைச்சி விற்பனை செய்ய நிர்ணயித்துள்ள விலையை கண்டித்து இன்று செவ்வாய்க்கிழமை முதல் அனைத்து மாட்டிறைச்சிக் கடைகளையும் மூட தீர்மானித்துள்ளதாக வரையறுக்கப்பட்ட கால்நடை இறைச்சி விநியோக தொழில் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் எம்.எம்.கமால் தெரிவித்தார்.

ஓட்டமாவடி பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் மாட்டிறைச்சி ஒரு கிலோ 1,000 ரூபாக்கும், கலவன் இறைச்சி 850 ரூபாக்கும் விற்பனை செய்யப்பட வேண்டும் என்று ஓட்டமாவடி பிரதேச சபை தவிசாளர் ஏ.எம்.நௌபரின் தலைமையில் கடந்த 16ஆம் திகதி நடந்த கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த கூட்டத்தில் எமது சங்கத்திலுள்ள இறைச்சிக்கடை உரிமையாளர்கள் கலந்து கொண்டு தங்களது நியாயமான காரணங்களை முன் வைத்த போதும் பிரதேச சபை அதனை மறுத்து தன்னிச்சையாக மாட்டிறைச்சிக்கு நிர்ணய விலையை மக்கள் மத்தியில் அறிவித்துள்ளது.

இதனால் எமது தொழிலாளர்கள் பல்வேறு பாதிப்புக்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இறைச்சிக்காக அறுக்கப்படும் மாடுகள் தட்டுப்பாடு, வெளிப் பிரதேசங்களுக்கு மாடுகள் ஏற்றுமதி, மாட்டுக்கான விலை அதிகரிப்பு போன்ற காரணங்களை கருத்திற்கொண்டு எமது சங்கத்தினால் ஒரு கிலோ தனி இறைச்சி 1,100 ரூபாய், இறைச்சி முள்ளுடன் 1,000 ரூபாய், ஒரு கிலோ ஈரல் 1,200 ரூபாய், பாபத் ஒரு கிலோ 500 ரூபாய், எனும் விலைகளில் விற்பனை செய்ய எமது சங்கம் தீர்மானித்துள்ளது.

எனவே, எமது இறைச்சிக் கடை உரிமையாளர்களின் நிலைமையை கருத்திற்கொண்டு, அவர்களது தொழில் பாதிப்படையாமல் ஓட்டமாவடி பிரதேச சபை நிர்வாகம் நியாயமான தீர்மானங்களை நடைமுறைப்படுத்த முன்வர வேண்டும்.

தங்களுக்கான நியாயம் கிடைக்கும் வரை ஓட்டமாவடி பிரதேச சபைக்குட்பட்ட மாட்டிறைச்சிக் கடைகளை இன்று முதல் மூடத் தீர்மானித்துள்ளோம் என்று வரையறுக்கப்பட்ட கால்நடை இறைச்சி விநியோக தொழில் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் எம்.எம்.கமால் மேலும் தெரிவித்தார்.



## காயங்கேணி கடலில் காணாமல் போன தந்தையும், மகனும் சடலங்களாக மீட்பு

வாகாரை - காயங்கேணி கடலில் காணாமல்போன தந்தையும் மகனும் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

வாகரை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காயங்கேணி கடலில் மீன்பிடிக்க நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தந்தையும் மகனும் சென்றுள்ளனர்.

இவ்வாறு கடலுக்குச் சென்று வீடு திருப்பாத இருவரையும் தேடும்பணிகள் தீவிரமாக இடம்பெற்று வந்த நிலையில், நேற்று மதியம் இருவரும் சென்ற இயந்திரப் படகையும், மீன்பிடிக்க கடலில் வைக்கப்பட்ட வலையையும் மீனவர்கள் மீட்டனர்.

காணாமல் போன மீனவர்களை தேடும்பணியை வாகரை பொலிஸாரின் உதவியுடன் கல்குடா சுழியோடிகள் முன்னெடுத்து வந்தனர்.

இந்நிலையில், கடலில் காணாமல் போன தந்தையையும், மகனையும் கல்குடா சுழியோடிகள் சடலங்களாக மீட்டுள்ளனர். மீட்கப்பட்ட இருவரும் காயங்கேணி சுனாமி வீட்டுத்திட்ட பகுதியைச் சேர்ந்த 55 மற்றும் 18 ஆகிய வயதுகளுடைய தந்தையும், மகனும் என்று அடையாளம்காணப்பட்டுள்ளனர். மரணமடைந்த இருவரதும் உடல்கள் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாகரை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தமிழர்களின் வாழ்வை கட்டி எழுப்ப வேண்டிய காலத்தில் நிற்கின்றோம்!

## முல்லையில் சிறிதரன் எம்.பி. தெரிவிப்பு



உலகப் பந்தில் தன்னுடைய முகவரியை இழந்து கட்டுமானங்களையும் இழந்து வாழ்க்கையின் அவலங்களையும் சுமந்து நிற்கின்ற தமிழர்களின் வாழ்வைக் கட்டி எழுப்ப வேண்டிய காலகட்டத்துக்குள் நாங்கள் நிற்கின்றோம் எனத் தமிழ்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார். முல்லைத்தீவு மாங்குளத்தில் அமைந்துள்ள போரால் பாதிக்கப்பட்ட மக்களின் மீள் வாழ்வைக் கட்டியெழுப்பும் மக்கள் நலன் காப்பகத்தின் பொங்கல் விழா நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

உலகப் பந்தில் தன்னுடைய முகவரியை இழந்து கட்டுமானங்களையும் இழந்து வாழ்க்கையின் அவலங்களையும் சுமந்து நிற்கின்ற தழிழர்களின் வாழ்வைக் கட்டி எழுப்ப வேண்டிய காலகட்டத்துக்குள் நாங்கள் நிற்கின்றோம். இன்று அரசியல் வாழ்வில் கூட கௌரவமான நியாயமான நேர்மையான நிலைகளிலிருந்து பின்தள்ளப்பட்டிருக்கின்றோம். இந்தத் தீவில் தேசிய இனமாகிய தமிழ்த் தேசிய இனத்தினுடைய பொருளாதாரத்தைத் தூக்கிநிறுத்த வேண்டிய சமூகக் கடமையும் பொறுப்பும் எங்களிடம் இருக்கின்றது.

இந்தப் பொருளாதாரத்தைக் கட்டி வளர்ப்பதில் உலகத்தின் மிகப்பெரிய டயஸ்போராவாக புலம் பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்கள் உள்ளனர். தங்களால் இயன்ற பொருளாதார வளங்களை பயன்படுத்தி வல்லமைகளை பயன்படுத்தி இங்கு வாழும் மக்களின் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தி வருவதை நாங்கள் காண்கின்றோம்.

ஈழத் தமிழர்களின் வாழ்வு புலம்பெயர் தமிழர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது. இன்னும் சுந்தரமான வாழ்வு இல்லை. இலக்கு நோக்கி பயணிக்கக் கூடிய சக்தி வாய்ந்தவர்களாக நாங்கள் இல்லை. கிடைக்கின்ற சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி நாங்கள் முன்னோக்கி பயணிக்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இத்தாலி மிலான் தூதரக அதிகாரி நீலா விக்கிரமசிங்க காலமானார்

இத்தாலியின் மிலான் நகரில் தூதரக அதிகாரியாக பதவி வகித்த நீலா விக்கிரமசிங்க காலமானார்.

71வயதாக அவர் இலங்கையின் மூத்த பெண் பாடகர் மற்றும் இசைக் கலைஞரும் ஆவார்.



# மின்சார பொறியியலாளர்கள் சுகவீன லீவு விடுமுறையில்!

கொழும்பு, ஜன. 18

சுகவீன விடுமுறையை அறிவிக்கும் வகையில் இன்று (செவ்வாய்க்கிழமை) நாடளாவிய ரீதியில் தொழிற்சங்க நடவடிக்கையொன்று முன்னெடுக்கப்பட்டதாக இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

மின்சா சபைக்கு புதிய பொதுமுகாமையாளரை நியமிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பது உட்படப் பல விடயங்கள் தொடர்பில் தொழிற்சங்கங்கள் நடவடிக்கை எடுத்து வருவதாக அதன் செயற்குழு உறுப்பினர் சரிதஜயநாத் தெரிவித்துள்ளார்.

நேற்று காலை இலங்கை மின்சார சபையின் தலைமை அலுவலகத்துக்கு முன்பாக கவனவீர்ப்பு போராட்டமொன்றை நடத்தியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

# 3 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் நாளாந்தம் இலங்கை வருகை!

இலங்கைக்கு நாளாந்தம் 3 ஆயிரம் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வருகை தருகின்றனர் என சிவில் விமான சேவைகள் அதிகார சபை தெரிவித்துள்ளது.

அந்த வகையில், நேற்றைய தினம் வரை நாட்டுக்கு 46 ஆயிரத்து 942 பேர் வருகை தந்துள்ளனர் என அந்த சபையின் தலைவர் உப்புல் தர்மதாச தெரிவித்துள்ளார்.

சுற்றுலா பயணிகளை நாட்டுக்கு அழைத்து வருவதற்காக 22 வெளிநாட்டு விமான நிறுவனங்கள் ஒத்துழைப்பு வழங்கியுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பல விமான சேவை நிறுவனங்கள் இலங்கையுடன் விமான சேவை உறவுகளை ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கொழும்பு துறைமுக நகர மெரினா நடைபாதை கடந்த வாரம் பொதுமக்களின் பாவனைக்காகத் திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கொழும்பு துறைமுக நகரை பார்வையிட அலைமோதுகின்றது மக்கள் கூட்டம்!

## மீண்டுமொரு கொரோனா அலைக்கு வாய்ப்பு



புதிதாக திறக்கப்பட்ட கொழும்பு துறைமுக நகரத்தின் மெரினா நடைபாதையில் பெரும் மக்கள் கூட்டம் அலைமோதுவது கொழும்பு துறைமுக நகர கொரோனா அலை உருவாகும் என்ற அச்சத்தை எழுப்பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொதுமக்களின் நடத்தை புதிய கொரோனா அலையை உருவாக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்துவதாக சுகாதார அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

எனவே, கொழும்பு துறைமுக நகரத்தின் மெரினா நடைபாதையில் கூட்டத்தைக் கட்டுப்படுத்துவது கண்டிப்பாக அமுல்படுத்தப்பட வேண்டும் என்று சுகாதார அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த விடயம் தொடர்பாகச் செய்தி வெளியிட்டுள்ள ஆங்கில ஊடகமொன்று, ஆதாரங்களின்படி, ஒமிக்ரோன் மாறுபாடு இலங்கையில் பரவி வருவதாகவும் கொழும்பு துறைமுக நகரத்தின் மெரினா நடைபாதையில் கூட்டம் கூடுவது தொற்றுநோய்களின் எண்ணிக்கையை அதிகரிக்கக்கூடும் எனவும் தெரிவித்துள்ளது. கடந்த இரண்டு நாள்களாக, சமூக விலகல் இல்லாமல் உல்லாசப் பாதையில் நுழைவதற்கான முறைக்காக பொது மக்கள் காத்திருக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. வளாகத்திற்குள்கூட சமூக இடைவெளியைக் கடைபிடிக்கவில்லை என்றும் நீண்ட வார இறுதியில் நடைபாதையில் நுழைந்த பெருந்திரளான மக்கள் முகக்கவசம் அணியாமல் புகைப்படம் எடுத்துக் கொண்டனர் எனவும் அந்த செய்தியில் கூறப்பட்டுள்ளது. நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து சுமார் 50 ஆயிரம் பேர் பார்வைக்காக இந்த இடத்துக்கு வருகை தந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# அதிவேக நெடுஞ்சாலையில் மற்றுமொரு விபத்து சம்பவம்

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் கொட்டாவ பகுதியில் கடும் போக்குவரத்து நெரிசல் நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மற்றுமொரு விபத்து ஏற்பட்டதன் காரணமாக இவ்வாறு கடும் போக்குவரத்து நெரிசல் நிலவுவதாக தெரிவிக்கப்படுகின்றது.



# தேவாலயத்தில் கைக்குண்டு சம்பவம் தொடர்பில் மேலும் ஒருவர் கைது!

பொரளை கத்தோலிக்க தேவாலயமொன்றில் கைக்குண்டு கண்டுபிடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் எம்பிலிப்பிட்டிய, பனாமுர பிரதேசத்தில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் துறைமுக பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேக நபர் கடவத்தை, பியன்வல பிரதேசத்தில் வசிக்கும் 65 வயதுடையவராவார்.

கடந்த 11 ஆம் திகதி பொரளை அனைத்து புனிதர்களின் தேவாலயத்தில் கைக்குண்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதுடன், மேற்படி தேவாலயத்துடன் நீண்டகாலமாகத் தொடர்பு கொண்டிருந்த மருதானையை சேர்ந்த 56 வயதுடைய நபரொருவரே சம்பவத்தின் பிரதான சந்தேக நபராகப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். மேலும் மூன்று சந்தேக நபர்களை கைது செய்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.01.2022இல் வெளியிடப்பெற்றது.